**முனி சின்னப்பா,எஸ்.டி.எம்.சி. தலைமை அதிகாரி**

**ஜி.ஹெச்.பி.எஸ். காடிரேனஹள்ளி**




ஒவ்வொரு ஆண்டும் மாணவர்களின் படைப்புக்களை காண்பிக்க,ஆர்ட் ஸ்பார்க்ஸ் அமைப்பு தங்களுடைய படைப்பு கற்றல் ஆய்வகத்தில் ஓர் இடத்தை ஒதுக்கி உள்ளார்கள்.கண்காட்சிகள் மாணவர்கள் மற்றும் பயிற்ச்சியாளர்களுக்கு அவர்கள் ஆண்டுதோறும் செய்கின்ற முயற்சிகளை வெளிப்படுத்த ஒரு சந்தர்ப்பத்தை வழங்குகின்றது.

மாணவர்கள் தங்களுடைய படைப்புக்களை பற்றி விளக்கவும் இக்கண்காட்சிகள் ஒரு வாய்ப்பை வழங்குகின்றன.இதன் மூலம் அவர்களின் உரையாடும் திறன் மற்றும் தன்னம்பிக்கையும் வளர்கின்றது.இவ்வருடம்,அனைத்து நடவடிக்கைகளும் மெய்நிகராக நடந்திருந்தாலும் மாணவர்களுடன் தொடர்பிலிருந்து எங்களால் கண்காட்சிகளை சில பள்ளிகளில் நடத்த முடிந்தது.

இந்த வருட கண்காட்சியின் பொழுது ,ஜி.ஹெச்.பி.எஸ். காடிரேனஹள்ளி,எஸ்.டி.எம்.சி. தலைமை அதிகாரி,திரு.முனி சின்னப்பா பள்ளியின் படைப்பு கற்றல் ஆய்வகத்திற்கு வந்தார்.மாணவர்களுடன் உரையாடிய பின்பு,அவர் கூறினார்,"இந்த பள்ளியின் வரலாறு மிகவும் புகழ்பெற்றது.இதன் முன்னாள் மாணவர்கள் பலர் இப்பொழுது நல்ல நிலையில் உள்ளனர் மற்றும் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களையும் சந்தித்துள்ளனர்.கடந்த சில காலமாக இவை அனைத்தும் மறைந்தது போல் தோன்றியது,ஆனால் இப்பொழுது இக்குழந்தைகளின் படைப்புகளை காணும் பொழுது அப்பழைய காலம் திரும்பியது போல் உள்ளது.இவர்களின் தன்னம்பிக்கை மிகவும் பாராட்டத்தக்கது."